(இ) தமிழ் நாடு அரிசன வீட்டு வசதி மேம்பாட்டுக் கழகம் கட்டிட வேலையை மேற்கொண்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் துவக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப் பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, ஒரு விளக்கம். மாண்புமிகு உறுப்பினர் வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள் தன்னுடைய சட்டப்பேரவை உறுப்பினர் பதவியை ராஜினாமா செய்து விட்டதாக சட்டமன்ற விடுதியில் பேசப்படுகிறது. அது சரியான தகவலா ? அதுபற்றித் தங்களுக்கு ஏதாவது அறிக்கை வந்திருக் கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

2. அறிவிப்புகள்.

(அ) உறுப்பினர் வீரபாண்டி திரு. எஸ். ஆறுமுகம் ராசினாமா குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சேலம் மாவட்டம் வீரபாண்டி தொகுதியிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட இம்மன்ற உறுப்பினர் திரு. எஸ். ஆறுமுகம் அவர்கள் தனது உறுப்பினர் பதவியை இராஜினாமா செய்து, எனக்கு 26—3—75 அன்று கடிதம் எழுதியுள்ளார். அக்கடிதம் 29—3—75 அன்று எனக்குக் கிடைத்தது. அன்னாரின் பதவி விலகல் கோரிக்கையினை இந்திய அரசியல் சட்டம் 190 (3) (பி) பிரிவின்படி, இந்தக் கடிதம் எழுதியது அவர் தானா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ள வேண்டிய நிலைமை எனக்கு இருப்பதால் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டு பேசியதில், அது உண்மைதான் என்று தெரிய வந்ததால், அவருடைய இராஜினாமாவை நான் ஏற்றுக்கொண்டேன் என்பதை இம் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : சட்டப்படி தந்த தகவலாக இருப்ப தால் கேட்கிறேன், என்ன காரணத்தால் இராஜினாமா செய்ய நேரிட்டது, ஏதாவது ஸ்டேட்மெண்ட் தந்திருக்கிறார்களா, அதன் விபரத்தை அறிவிக்க இயலுமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சட்டப்படி அவர்கள் ஏதாவது காரணம் கொடுத்திருந்தாலும் அந்தக் காரணத்தை அவையிலே தெரிவிக்க வேண்டுமென்ற நிலைமை இல்லை.

1975 மார்ச் 31]

திரு. நா. வீராசாமி: தலைவரவர்களே, தொலைபேசியில் தொடர்பு கொண்டு, வந்த கடிதம் உண்மை என்று தெரிந்து, ஏற்றுக் கொண்டதாகச் சொன்னீர்கள். சட்டமன்ற விதிப்படி தொலைபேசியில் தொடர்புகொள்ளும் ஏற்பாடு இருக்கிறதா ? அதை விட.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கொடுத்த கடிதம் உண்மையா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள வேண்டிய பொறுப்பு எனக்கு இருக்கிறது. அதனுல் தொடர்பு கொண்டு, தெரிந்துகொள்ளப் பட்டது.

திரு. நா. வீராசாமி : தொலைபேசியில் சில சமயங்களில் வேறு யாராவதுகூட அவர்மாதிரியே பேசலாம். சமீபத்தில் இந்திராகாந்தி நகர்வாலா விவகாரத்தில்கூட, இந்திராகாந்தி போலவே (மணி அடிக்கப்பட்டது).

[முற்பகல் 9-30]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது அவையுரிமைக் குழுவின் தலைவர் மாண்புமிகு திரு. நா. கணபதி அவர்கள் அக் குழுவின் அறிக்கையை அளிப்பார்கள்.

4. அறிக்கை அளித்தல்

திரு. அப்துல் சலாம் "மக்கள் குரல்" பத்திரிகை ஆசிரியர் ஆகியோர் மீது எழுப்பப்பட்ட உரிமை மீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கை.

மாண்புமிகு திரு. நா. கணபதி : அரகண்டநல்லூரைச் சேர்ந்த திரு. அப்துல் சலாம், "மக்கள்குரல்" பத்திரிகை ஆசிரியருக்கு விடுத்த வழக்குரைஞர் அறிக்கையில் பேரவைமதிப்பீட்டுக் குழுவின் தலைவர் மீதும், உறுப்பினர்கள் மீதும் களங்கம் கற்பிக்கும் வகையில் குறிப் பிட்டிருப்பது பற்றிய அவையுரிமைமீறல் வழக்கு மீதான அவையுரிமைக் குழுவின் அறிக்கையை அளிக்கிறேன்.

திரு. க. உரொ. எட்மண்ட் : நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் கொடுத்திருக்கிற அவையுரிமைக் குழுவின் அறிக்கையை இந்த அவை ஏற்றுக்கொள்வதற்கு முன்னல்.........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது பிரசென்டேஷன்தான். அதன் மீது விவாதிக்க வேண்டுமென்று சொன்னல் பின்னர் நாள் குறித்து விவாதிக்கலாம்.